# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 27, 2024

Weekly E-paper ● April 27, 2024




# பங்கு பிரிக்கும் சண்டை! சந்தி சிரிக்கும் பாஜக!

சுப. வீரபாண்டியன்

## தேறா ஆணையம்!

மா.உதயகுமார்

## அழைக்கிறார் புரட்சிக்கவிஞர்

தலையங்கம்

## திராவிடக் கவிஞர் பாரதிதாசன்

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 27, 2024

Weekly E-paper ● April 27, 2024


# பங்கு பிரிக்கும் சண்டை! சந்தி சிரிக்கும் பாஜக!

**சுப. வீரபாண்டியன்**

எதுவும் பேசாமலாவது இருந்திருக்கலாம், பாஜகவின் தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலை! நாங்கள் ஒரு ரூபாய் கூடக் கொடுக்கப் போவதில்லை என்று அவர் சொன்ன அந்தச் சொற்கள், இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு பெரிய கேலிக்கூத்தாக ஆகும் என்று யாரும் நினைத்து இருக்க மாட்டார்கள்!

நான்கு கோடி ரூபாய் நயினார் நாகேந்திரன், இப்போது வாய் திறந்து இருக்கிறார். பணத்தைக் கொண்டு வந்த அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள் தான். ஆனால் அந்தப் பணம் என்னுடையதில்லை என்று சொல்லி இருக்கிறார். ஒரு திரைப்படத்தில், மாப்பிள்ளை இவர்தான் - ஆனால் சட்டை இவருடையதில்லை என்பதாக ஒரு நகைச்சுவைக் காட்சி வரும். அதை மிஞ்சி விட்டது நயினாரின் கூற்று!




மோடி ஆட்சி மாறிய பிறகு, மாப்பிள்ளையும் இவர்தான், சட்டையும் இவருடையது தான் என்பது தெளிவாக, அப்போது மாப்பிள்ளை மாமியார் வீட்டுக்குப் போய் வர வேண்டி இருக்கும்!

சென்னையில், மயிலாப்பூர் இந்து சாசுவத நிதியில் 525 கோடி ரூபாய் மோசடி நடந்துள்ளதாக ஏடுகள் சொல்கின்றன. அந்த நிறுவனத்தில் பணத்தைப் போட்ட பொதுமக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனத்தின் தலைவர், தேவநாதன்தான் சிவகங்கை பாஜக வேட்பாளர்!


ஊழல் என்றால் என்ன என்றே தெரியாத பாஜகவின் லட்சணம் இது!

அரசல் புரசலாகப் பேசப்பட்ட செய்திகள் எல்லாம், இன்று விருதுநகர்த் தொகுதியில் வெட்ட வெளிச்சமாய் நடுத்தெருவிற்கே வந்து விட்டன! பூத் ஏஜென்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட 30 லட்சம் ரூபாயை, மாவட்ட நிர்வாகிகள் சுருட்டி விட்டனர் என்னும் புகாரை அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களே சுவரொட்டிகளாக அடித்து, விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் சட்டமன்ற தொகுதி முழுவதும் ஒட்டி இருக்கிறார்கள்.

இப்படிப் பொது பணத்தைப் பங்கு பிரிக்கும் உத்தமர்கள்தான் பாஜகவில் இருந்து கொண்டு, ஊழல் - மோசடி பற்றி எல்லாம் பேசுகிறார்கள்.

சத்தியவான்களின் யோக்கியதை, இப்போது சந்தி சிரிக்கும் நிலைக்கு உள்ளாகி விட்டது!

●

# தேறா ஆணையம்!

மா.உதயகுமார்

இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல்களைப் பாரபட்சமற்ற வகையில் நடத்துவதற்காக உருவாக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் அப்படித்தான் நடந்து வருகிறதா என்பது எப்போதுமே கேள்வியாகவே இருக்கிறது. ஆனால் தேர்தல் ஆணையம் முழுமையாக ஆளும் கட்சியின் கிளை அமைப்பு போலச் செயல்படுவது என்பது இதுவரை நாம் காணாத காட்சியாகும்.

இந்தியா என்பது உலக அளவில் பரந்த நிலப்பரப்பு கொண்ட நாடுகளுள் ஒன்றாகும். அதிக மக்கள் தொகை கொண்ட நாடுமாகும். உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்றும் போற்றப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நாட்டில் தேர்தல் ஆணையம் ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமாக ஆளுங் கட்சியின் அதிகாரத்திற்கு அடிபணிந்து செயல்படுவது என்பது உலக அளவில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவாகவே இருக்கிறது.




பாஜகவின் இந்தச் செயல்பாடுகள் இந்தியாவைக் கடந்து உலக அளவிலும் ஜனநாயகவாதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

மதவாதத்தையும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மீது வெறுப்புணர்வையும் தூண்டுவது தேர்தல் பரப்புரைகளில் இது முதல் முறையன்று. இதற்கு முன்னர் சிவசேனாவின் பால்தாக்கரே இதுபோல வெறுப்புணர்வைத் தூண்டி பரப்புரை செய்த போது நீதிமன்றம் அவருக்கு தேர்தல் பரப்புரை செய்யத் தடை விதித்தது

இன்று இத்தனைக் கோடி மக்களுக்குப் பிரதமராக இருக்கும் மோடி, தொடர்ச்சியாக அப்படிப்பட்ட வெறுப்புப் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார். எத்தனையோ புகார்கள் கொடுக்கப்பட்ட போதிலும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்யும் புகார்களுக்கு எதிராக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செயலற்ற தன்மை, தேர்தல் செயல்முறையின் நடுநிலையான ஆணையத்தின் பங்கைப் பற்றிக் கடுமையான கேள்விகளை எழுப்புகிறது. மிகத் தெளிவாக நரேந்திர மோடியை தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யக்கூடிய குற்றச்சாட்டை இவ்வளவு வெட்கக்கேடான வகையில் கையாளுவதற்கு ஒரு ஆணையம் எதற்கு?

கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க ஆட்சி என்பது உலகின் அரசியல் வரலாற்றில் பல்வேறு தவறான போக்குகளுக்கு முன்னுதாரணமான செயல்களை அரங்கேற்றி வருகிறது. அப்படி அரங்கேற்றப்பட்ட செயல்களுள் உச்சகட்ட செயல்தான் தேர்தல் ஆணையச் சீர்குலைப்பு ஆகும்.

டெல்லியில் இருந்து வெளியாகும் அரசியல் மற்றும் பண்பாட்டு மாத இதழான 'The Caravan', ஏப்ரல் மாத வெளியீட்டில் "The Taming of the Election Commission of India" என்கின்ற தலைப்பில் Cover Story (அட்டைப்படக் கட்டுரை), வெளியிட்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தைப் பாரதிய ஜனதா கட்சி எப்படியெல்லாம் தன்னுடைய பிடிக்குள் கொண்டு வந்தது, அதற்காக எப்போது இருந்து அதன் வேலைகளைத் தொடங்கியது என்பது தொடங்கி, தேர்தல் ஆணையராக அருண் கோயலின் அதிவேக நியமனம், தேர்தல் ஆணையர்கள் பதவி விலகல்கள், நேர்மையான தேர்தல் அதிகாரிகளின் பணியிடை நீக்கங்கள், வாக்கு இயந்திரக் குளறுபடிகள், எதிர்க் கட்சியினர் அரசியல் கைதுகள், NaMo தொலைக்காட்சி ஒளிபரப்பு என பல்வேறு விசயங்களில் தேர்தல் ஆணையம் எந்த அளவிற்கு ஆளுங்கட்சிக்கு அடிபணிய வைக்கப்பட்டிருக்கிறது என்பது விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

ஆளுங்கட்சியினர் என்ன செய்தாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்கின்ற திட்டமிட்ட முடிவுடன் தேர்தல் ஆணையம் இருக்கிறது. நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சிதான் நினைவுக்கு வருகிறது, இவ்வளவு நேரம் நெருப்பிலிருந்தும் வெடிக்கவில்லை என்றால இது வெடிகுண்டு அல்ல வெறும் குண்டு என்பதைப் போல, இவ்வளவு வெளிப்படையாக தேர்தல் விதிமீறல்கள் நடக்கும் போதும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றால், இது தேர்தல் ஆணையம் அல்ல.

தேறாத ஆணையம்! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அழைக்கிறார் புரட்சிக்கவிஞர்

"மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம்எனும் நினைவா?...
உதவாதினி ஒருதாமதம்

உடனே விழி தமிழா!" - எச்சரிக்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டை ஆண்ட 'மகராசர்'களை தமிழக மக்கள் புரிந்து கொண்டார்கள்.

விழிப்படைந்த தமிழர்கள் தி.மு.கவின் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியில் அணிவகுத்துக் காவிகளுக்கு விடைகொடுத்து விட்டார்கள் 19-04-2024 அன்று, மை விரலால்.

இப்பொழுது இந்திய ஒன்றியம் முழுவதும் தாமரையைத் தூக்கியெறியத் தயாராகி விட்டார்கள்.

இப்பொழுதும் மோடி, அமித்ஷாக்களின் வெறுப்புப் பேச்சுகளில் இருந்து அவர்களின் கோரமுகம் தெளிவாகத் தெரிகிறது.

ஆர். எஸ். எஸ் இன் 'அஜெண்டா' வைச் சிரமேற் கொண்டிருக்கும் பா.ஜ.க அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானாலும், ஆர்.எஸ். எஸ் இன் பார்ப்பனிய சனாதனத்தை நிலைநிறுத்த வேண்டுமானாலும் என்ன வேண்டுமென்றாலும் செய்யும்.

பா.ஜ.கவை ஆட்சியில் இருந்து அகற்றினால் மட்டும் போதாது. ஒரே ராம ராஜ்ய நாடு, ஒரே சர்வாதிகார அதிபர் ஆட்சி, ஒரே சமஸ்கிருத மொழி, ஒரே சனாதனப் பண்பாடு என்று பாசிசத்தை வலுப்படுத்தி மேலெடுக்க அது முயற்சி செய்யும். பதுங்கிப் பாய்வது அதன் இயல்பான குணம். தேர்தல்களோடு நம் பணி எப்போதும் முடிந்திடுவதில்லை. அதையும் தாண்டி தந்தை பெரியார் வழியில் பணியினைத் தொடர, இதோ புரட்சிக் கவிஞர் அழைக்கிறார்,

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!
தலையாகிய அறமே புரி
சரிநீதி யுதவுவாய்!
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்!"

புரட்சிக்கவிஞரின் பிறந்தநாள் ஏப்ரல் 29. அந்நாள் நம் பேரவை நாள். அன்றே உறுதியேற்போம்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது 31- 3- 2024 அன்று ஈரோட்டில் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களிடம் "திராவிட முழக்கம்" திங்களிதழை, திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் அ. தமிழ்க்குமரன். கொடுத்தார். அப்போது அமைச்சர் சு.முத்துசாமி, திமுக வேட்பாளர் பிரகாஷ், தோழர் சுந்தரமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

# திராவிடக் கவிஞர் பாரதிதாசன்

## வெற்றிச்செல்வன்



தமிழ் இலக்கியத் தளத்தில் திராவிடத்தை முன்னிறுத்திப் பாடல்களை இயற்றித் தமக்குப் பின்னர் ஒரு பாட்டுப் பரம்பரையையே உருவாக்கிச் சென்றவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

புதுவையில் அவர் தமிழாசிரியராகப் பணிபுரிந்தபோது, பள்ளிக் குழந்தைகளுக்கான பாடநூல்கள் கடினமான முறையில் அமைந்திருப்பதைக் கண்டார். பாடநூலில் 'அ' என்ற எழுத்தைக் கற்பிக்க, அணிலின் படம் வரையப்பட்டு 'அ அணில்' என்று குறிப்பிடப்பட்டிருக்கும். எழுதுவதற்குக் கடினமான 'ணி' என்னும் சொல்லைவிடத் தனக்கு நன்கு பழக்கப்பட்ட 'அம்மா' என்ற சொல்லை எளிதாகப் புரிந்து கொண்டு குழந்தைகள் கற்றுவிட முடியும் என்பது பாரதிதாசனின் கருத்து. இந்தத் திருத்தத்தை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று காத்திருக்காமல், எளியமுறையில் பாடநூல் ஒன்றைத் தாமே எழுதிப் பயிற்றுவித்தார். இதேபோல, 'வ' என்ற எழுத்திற்கு வண்ணான் என்றும், 'ஐ' என்ற எழுத்திற்கு ஐயர் என்றும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தன. குழந்தைகளின் உள்ளத்தில் ஜாதிய வேற்றுமையைக் கற்பிக்க விரும்பாத பாரதிதாசன், அச்சொற்களை மாற்றியமைத்துப் பயிற்றுவித்தார்.


பாரதிதாசனின் கருத்தியல் பாதையில் தாக்கத்தைச் செலுத்தியவர்கள் இருவர். ஒருவர் மகாகவி பாரதியார், மற்றொருவர் தந்தை பெரியார். பாரதிதாசன் பாரதியாருடன் கொண்டிருந்தது தனிப்பட்ட நட்பு. பெரியாருடனான தொடர்போ ஓ இயக்கத்துடனான பயணம். தன்னை திராவிடராகவே பாரதிதாச அடையாளப்படுத்திக் கொண்டா 'நான்தான் திராவிடன்' என்று கவி பாடினார்.

1938 இல் பாரதிதாசன் கவிதைக முதல் தொகுப்பு வெளியானது சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந் குஞ்சிதம் குருசாமி இணையர்களி முயற்சியால்தான். அத்தொகுப்பிற் எழுதிய சிறப்புரையில் பாரதிதாசனை 'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி' என்று பெரியா பாராட்டுகிறார்.

ஜாதி ஒழிப்புத் தளத்தில் எளிமையான முறையி நகைச்சுவையுடன் கூடிய கதைகளைப் படைப்பதி பாரதிதாசனுக்கு நிகர் அவரே. 'செவ்வாயுலக யாத்திரை என்ற அவரது கதையில், ஆறு நண்பர்கள் செவ்வாய் கோளுக்குச் செல்கிறார்கள். அங்கு வசிக்கும் மனிதர்க தங்கள் தலையில் பெரிய கல்லை எப்போதும் சுமந்தவா இருக்கிறார்கள். அதற்குக் காரணம் கடவுள் ஏற்பா என்கிறார்கள். பூமியில் இருந்து சென்றவர்கள் இதை கண்டு சிரிக்கிறார்கள். சில நாட்களில் பூமியிலிருந் சென்றவர்களுக்கிடையில் ஜாதியின் காரணமாக சண்டை வருகிறது. ஜாதியைப் பற்றிச் செவ்வாய்வாசிக கேட்டறிகிறார்கள். இறுதியில், 'நாங்கள் தலையி தூக்கிச் சுமக்கும் கற்களால் ஆபத்தில்லை; ஆனா நீங்கள் சுமக்கும் ஜாதி என்னும் கற்கள் கண்ணுக்கு தெரியவில்லை, ஆனால் ஆபத்தானவை. கண்ணுக்கு தெரியாத அந்தச் சுமையை இறக்கி வையுங்கள்' என் அறிவுரை சொல்கிறார்கள்.

பாரதிதாசனின் தமிழ்ச் சமூகத்திற்கான பணிகளை அங்கீகரிக்கும் பொருட்டு, அவருக்குச் சிறப்புச் செய் வேண்டும் என்று கருதினார் அண்ணா. பாரதிதாசனுக்கு பொற்கிழி வழங்கும் ஏற்பாட்டினைச் செய்து அதற்கா நிதியைத் திரட்டுவதற்கான கோரிக்கையைத் திராவிட நாடு ஏட்டின் வழியாக முன்வைத்தார். தந்தை பெரியா ரூ. 150 வழங்கி நிதி வழங்குவோர் பட்டியலைத் தொடக் வைத்தார். 1946ஆம் ஆண்டு பாரதிதாசனுக்கு ரூ. 24, 39 பொற்கிழியாக வழங்கப்பட்டது.

தனது வாழ்நாளின் இறுதிவரை தமிழ்மொழியையு தன்மானத்தையும் இறுகப் பற்றிக் கொண்டவ பாரதிதாசன். அவர்தம் புகழ் என்றும் இம்மண்ணி நிலைத்திருக்கும். ●




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian